IRDCRP

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

**ஒன்றிணைந்த கிராமிய - நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை மீள்திறன் கருத்திட்டம் (IRDCRP) கூறு 1.3**

# ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு (EOI – 2026/YW1)

## " AgriConnect" உலக வங்கி குழும முயற்சி ஒன்றுடன் இணைந்து கிராமிய பொருளாதார மீள்திறன், நிலைத்தன்மை மற்றும் சுபீட்சத்தைக் கட்டியெழுப்புவதற்கு கைகோர்த்தல்

விவசாய. கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைப்பு (MoALLI), உலக வங்கி குழுமத்தின் ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்படுகின்ற, ஒன்றிணைந்த கிராமிய – நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை மீள்திறன் கருத்திட்டத்தின் (IRDCRP) புத்தாக்க வர்த்தக யோசனைகள் உள்ள பெண்கள், இளைஞர்கள், விசேட தேவையுடையோர் மற்றும் பொருளாதார செயற்பாடுகளின் குறைந்த அளவான பிரதிநிதித்துவத்தைப் பெற்ற குழுக்களைச் சேர்ந்தவர்களுக்காகவும் பெறுமதிசேர் முதலீடு, வர்த்தக மற்றும் ஏற்றுமதியைக் இலக்காகக் கொண்ட விவசாய வர்த்தக மற்றும் பெறுமதிசேர் செயற்பாடுகள் அடிப்படையாகக் கொண்ட வர்த்தகத் துறையின், தனியார் துறையின் பங்களிப்பை பலப்படுத்துவதற்காக இளம் வர்த்தகர்கள் திட்டத்திற்கு வர்த்தக வாய்ப்புகளுக்கு அவதானம் செலுத்தும் நோக்கில் உப - கூறு 1.3 இன் கீழ் ஆர்வ வெளிப்பாட்டுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

நவீன மற்றும் வர்த்தக ரீதியிலான பன்முகப்படுத்தப்பட்ட விவசாய உணவுத் துறையை மேம்படுத்துவது பொருளாதார மீட்சி மற்றும் கிராமிய சுபீட்சத்திற்கான அரச மூலோபாயத்தின் தீர்க்கமான பகுதி ஒன்றாக உள்ளது. அதன்படி, IRDCRP, கிராமிய சமூகங்களுக்காக நிலைபெறுதகு விவசாய-உணவு முறைமைகள், காலநிலை-ஸ்மார்ட் விவசாயம், செயல்திறன் நீர்முகாமைத்துவத்தை ஊக்குவிக்கிறது.

இளைஞர் மற்றும் பெண் தொழில்முயற்சியாளர்களை பலப்படுத்தல்

ஒன்றிணைந்த கிராமிய – நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை மீள்திறன் கருத்திட்டத்தின் (IRDCRP) உப கூறு 1.3 மலிவான, நம்பகமான மற்றும் காலநிலை-ஸ்மார்ட் விவசாயத்தின் வரையறுக்கப்பட்ட கிடைக்கும் தன்மையுடன், விவசாய மதிப்புச் சங்கிலிகளுடன் இளைஞர்கள் மற்றும் பெண்கள் தலைமையிலான தொழில் முயற்சியாண்மையை ஆதரிப்பதன் மூலம் தனியார் துறை விவசாய வர்த்தக வழங்கலை வலுப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. காலநிலை மற்றும் பொருளாதார அதிர்வுகளுக்கு எதிரான தாங்குதிறனை உயர்த்தி, வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு, உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்தல், சந்தை அணுகலை மேம்படுத்துதல் மற்றும் உள்ளடக்கிய கிராமிய வேலைவாய்ப்பை வளர்ப்பதற்கு இந்தக் கட்டுப்பாட்டை தீர்க்க நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

வங்கி கடன் பெறக்கூடிய மதிப்புச் சங்கிலி முதலீடுகள் கண்டறியப்பட்டு, ஒரு செலவுப் பகிர்வு ஏற்பாட்டின் மூலம் நிதியளிக்கப்படும் இதில் முதலீட்டின் ஒரு பகுதியை IRDCRP ஊக்குவிப்பு முதலீடாகக் கையாளும் அதேநேரம் எஞ்சிய செலவை பயனாளிகள் வழங்கும் பங்களிப்புகள் மற்றும் ஒரு வர்த்தக வங்கியில் பாதுகாக்கப்பட்ட கடன் மூலம் ஏற்கும்.

**முதலீட்டு வாயில்கள்**

இந்தத் திட்டம், தனியார் துறை விவசாய வர்த்தக வழங்கலை ஊக்குவிப்பதற்கான பணிகள், பொருட்கள் மற்றும் சேவைகளை ஆதரிக்கும், குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான வர்த்தக வாய்ப்புகளை மதிப்புச் சங்கிலியில் ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தும்.

**கூறு 1.3 இற்கான நிதி அளவுறுக்கள்**

| **விபரம்** | | வாயில் 1 | வாயில் 2 |
|---|---|---|---|
| **குறைந்தபட்ச மொத்த முதலீடு** | | ரூபா 2,000,000 தொடக்கம் ரூபா 6,000,000.00 | ரூபா 6,000,000 அல்லது அதற்கு மேல் |
| **IRDCRP இல் இருந்து முதலீட்டு ஆதரவு** | | 50% அல்லது அதிகபட்சம் ரூபா 2,000,000 | 35% அல்லது அதிகபட்சம் ரூபா 3,500,000 |
| **பயனாளிகளின் சொந்த பங்களிப்பு அல்லது நிதி நிறுவனக் கடன்** | | 50% (குறைந்தபட்சம்) | 65% |
| **வயது எல்லை** | **இளைஞர்** | 18 - 40 வயது | 18 - 40 வயது |
| | **பெண்கள்** | 18 - 50 வயது | 18 - 50 வயது |

**தகுதிவாய்ந்த துறைகள்**

விவசாயம், கால்நடை, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் மீன் வளர்ப்பு, வாசனைச் சரக்குகள், தோட்டப் பயிர்கள்

**விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்**

ஆர்வமுடைய உற்பத்தியாளர் அமைப்புகள் கமத்தொழில் அமைச்சு இணையதளத்தில் (www.agrimin.gov.lk) Documents → Forms (https://agrimin.gov.lk/downloads/forms) இன் கீழ் கிடைக்கப்பெறும் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தைப் பயன்படுத்தி (கூறு 1.3 இளைஞர்கள் மற்றும் பெண்கள் தொழில்முயற்சியாளர்கள்) அல்லது எமது புதிய உள்ளீடுகளை வாசித்து பதிவுத் தபால் மூலம் தமது ஆர்வ வெளிப்பாட்டை (EOIs) சமர்ப்பிப்பதற்கு கோரப்படுகின்றனர்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "EOI 2026/YW1" என்று தெளிவாகக் குறிப்பிட்டு EOI இனை சமர்ப்பித்தல் வேண்டும். EOI இனை சமர்ப்பிப்பதற்கான ஆரம்ப இறுதித் திகதி 2026 மே 15 அன்று (மேலதிக விபரங்களுக்கு மேலுள்ள இணையதள இணைப்பில் உள்ள வழிகாட்டலை வாசிக்கவும்)

**தேர்வு நடைமுறை**

திட்ட முகாமைத்துவ பிரிவின் (PMU) மூலம் உருவாக்கப்பட்ட அளவுகோல் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் குறுகிய பட்டியலில் சேர்க்கப்படுவர். முதலில் வருவதற்கு முதலிடம் என்ற அடிப்படையில் தேர்வு மேற்கொள்ளப்படும். குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சை, கள சரிபார்த்தல் மற்றும் முன்மொழியப்பட்ட மேம்பாட்டு நடைமுறை ஆகியவற்றின் மூலம் மதிப்பீடு செய்யப்படுவர்.

**மேலதிக விபரம்**

மேலதிக விபரங்களுக்கு 011 2 877 550 என்ற இலக்கத்தின் மூலம் திட்ட முகாமைத்துவ பிரிவை தொடர்புகொள்ளவும்.

**திட்டப் பணிப்பாளர்**
**ஒன்றிணைந்த கிராமிய – நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை மீள்திறன் கருத்திட்டம்**
**திட்ட முகாமைத்துவ பிரிவு**
**123/2, பன்னிப்பிட்டிய வீதி**
**பத்தரமுல்லை.**